தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௮	திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௩ நந்தன—கார்த்திகை 1952—நவம்பர்	மலர் [illegible]

மகிழ்ச்சி.

—o—

செந்தமிழ்ப் பெருமக்கள் முன்னணியில் விளங்கும் பெருமக்களுள் சிறந்து விளங்கும் பேரறிஞர் வீரத்திரு. இராம. கந்த. சண்முகம் செட்டியா ரவர்கள் தம் அறுப தாவது ஆண்டு நிறையப் பெற்று அன்பர்க ளெல்லாரும் வெள்ளணி விழாக் கொண்டாடியதற்குப் பெரு மகிழ் வெய்தி, திரு. செட்டியா ரவர்கள் நாளும் நாளும் எவ்வகை நலங்களும் மேன்மேலும் பெருகப் பெற்றுத் திகழ்வார்க ளாக எனத் திருவருளை வழுத்துகின்றோம்.

திருவாளர் செட்டியா ரவர்கள் அரசியற் றுறையிலும் பொருளியற் றுறையிலும், அறிவியற் றுறையிலும் திறம் பெற விளங்கி, நாட்டிற்கும் நம் செந்தமிழ் மொழிக்கும் ஆற்றிவரும் பெருந் தொண்டு உலகறிந்ததே. செட்டி நாட்டரசர் பேரறிஞர் வீரத்திரு. அண்ணாமலைச் செட்டி யார் அவர்கள் ஆர்வங் கொண்டு தொடங்கிய தமிழிசைப் பணி, பேரறிஞர் வீரத்திரு. சண்முகம் செட்டியார் அவர் களால் நாளும் நாளும் சிறப்புற வளர்க்கப் பெற்று வரு கின்றது. திருவாளர் செட்டியா ரவர்கள் உள்ளக் கிடக் கையின் வெளித் தோற்றமாக, நிகழும் 1952, அக்டோபர், 31உ வெள்ளிக் கிழமை காலை சென்னையில் அண்ணாமலைப் பெருமன்றம் என்னும் தமிழிசைப் பெருநிலையம் தோன்றி வானளாவ விளங்கி நின்று தமிழ் மக்கட்கெல்லாம் பேரு வகை தருவதாகின்றது. செந்தமிழ்ப் பேரன்னை முத்திறத் தமிழும் விளங்க இசை நடம் புரிந்து தம் மக்களை மகிழ் வுறச் செய்வாளாக!

—

பொருந்துமா? (கஅ)

உளநூலாசிரியர் புலவர்மணி M. குஞ்சிதபாத தேசிகர், நன்னிலம்.

தமிழ் நாட்டில் ஊர்களிற் பலவற்றிற்குக் காரணம் பற்றியே முன்னோர் பெயர் வழங்கி வந்துள்ளார்கள். இவ்வாறு காரணம் பற்றி வைத்த ஊர்களில் அரந்தாங்கி என்ற ஊரும் ஒன்றாம். இவ்வூரினைப் பலரும் அறிந்திருப்பார்கள். இவ்வூரின் பெயர் அரந்தாங்கி என்று சொல்வது கூடாது (அறம் + தாங்கி) அறந்தாங்கி என்றிருக்க வேண்டுமென்று சில ஆராய்ச்சியாளர் சொல்லிவருகின்றனர். இவ்வாறு கூறுவதும் பிழை என்பது பின் வருங் காரணங்களால் தெரியவரும்.

அரண்தாங்கிப் பக்கத்தில் உள்ள ஊர்களில் தொழாலூர் என்பதும் ஒன்றாம். அவ்வூர் நிரம்ப வழகிய தேசிகர் பரம்பரை வித்துவான்களில் ஒருவர் அரண்தாங்கியை ஆண்ட சிற்றரசரைக் கவி பாடிக்கொண்டு பார்க்க வந்தார் என்றும், தக்க கவனமின்றி அரசன் இருந்ததால் வசை பாடினார் (அறம் வைத்துப் பாடினார்) என்றும் அதன்படி கோட்டை முதலாயின பின்னர் அழிந்து விட்டதென்றும், பிரபல தேவார ஆசிரியரான கீழ்வேளூர் சொக்கலிங்கத் தேசிகரின் மனைவி (என் உறவினர்) அழகிய வெண்பா ஒன்றை என் இளம் பிராயத்தில் சொல்லக் கேட்டதுண்டு. ஆனால் அச் செய்யுளின் கருத்தை யறிந்தேனே ஒழிய செய்யுளைக் குறித்துக்கொள்ளவில்லை ஏனென்றால் சாபம் பாட்டாய் இருந்ததால் இது எதற்கு என்று அப்போது விட்டு விட்டேன். முன்னர் ஊரின் சிறப்பையும் பின்னர் அரண்மனை அழிக என்பதும் அப் பாட்டில் அடங்கியுள்ள கருத்துக்களாகும். இதனால் அவ்வூர் சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது என்பதும் அரணைப் பெற்றிருந்தது என்பதும் உறுதி. இப்போதும் சிதைந்த அரணைப் பார்க்கலாம். ஆகவே அரண் + தாங்கி, மண் + தாங்கி மண்தாங்கி என்று இயல்பாய் வருவது போல அரண்தாங்கி என "இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்" என்னும் நன்னூல் சூத்திர விதிப்படி இயல்பாக வந்துள்ளது. ஆகவே இதுகாறும் கூறியவற்றால் (1) அரந்தாங்கி, (2) அறந்தாங்கி என்பன பிழை. அரண்தாங்கி என்று கூறுவதே சரியானதாகும் என்று ஓர்ந்து உண் மகிழ்க.

பொருந்துமா. சிந்திக்க.

இசையறிவின் நலம்.

தென்னுப்பிரிக்கா—டர்பன்—திரு. ச. மு. பிள்ளை, அவர்கள்,

இசை அற்றவனே உயிரற்றவன் என்பர். இசையால் அநேக நன்மைகள் வருவனவுண்டு. அவ்விசை கேட்டலாலும், தானே பாடுவதாலும் இன்பம் தோன்றும் என்றாலும், ஒருவனது இசையை நுகர்தலைக் காட்டிலும், நாமே இசைத்து அதன் அமைப்பை அடைந்தால், இன்பும் நலமும் மிகும். இன்னது இன்ன இசை, இது இன்னகாலத்து இசை, இதனால் இன்ன பயன் உண்டு, என அறிவாரும் அறியாரும் உண்டு. அறிந்து இன்புறுதலே தலைப்பட்டதாகும். இசையில் முன்னறிவிருந் தால், யாராவது பாடுமிடத்து அதன் குணங்கண்டு போற்ற ஏதுவாகும். ஆதலால் ஒவ்வொருவரும் இசையினைப் பயின்று, அதன் இயலைக்கண்டு இசைக்க இசைவு கொள்ளின், இன்பம் பல பெற்று வாழ்வார்.

மிருகங்களும் தாவரங்களும் இசையினைக்கேட்டு இன்புறல் உலகமறிந்ததே எனவே ஆறறிவுடைய மக்கள் அவ்விசையை இசைக்க இணங்குவது அவசியமல்லவா? பூ, இசைக்கு மலரும் என்பதைக் குறுந்தொகையில்; "வண்டுதே வாய் நெகிழ்ந்தனவே" என்று விளக்கினர். "பறைபட வாழா அசுணமா" என்பது நான்மணிக் கடிகையால் தேறப்படும். பாகவதத்தில் குழல் ஊதிய அத்தியாயமானது, பசுக்கள் இசைக்கு வருதலை நன்கு உணர்த்துகிறது. "ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாய்" எனும் சுந்தரரது கருத்து, இறைவன் அருள் பெறவும் இசை வேண்டுமென்பது தானே. இவற்றிற்கெல்லாம் வேண்டிய இசை, தானே அடைந்திருக்க வேண்டுமா? ஆம், தனக்குத்தானே அடையின் பலன் தரலுண்டு, பொறிகளும், புலன்களும், கருவி கரணங்களும் அடங்க வேண்டுவதற்கும் இஃதே துணையாகும். பண்ணின் மூலம் பண்ணவனை அடைவ தற்கு ஏது பலவுண்டு. அவனைப் பரவப் பாட்டும் துணை யாகும். 'இசையறியான் என்றும் இன்பமறியான்' என சேப்பியர் குறித்தமையும் அறிக. ஒழுங்கில்லா இசை எப்போ தும் வசையாகும். ஆதலால் இசையின் இயலுணர்ந்தாரிடம் இருந்து ஒழுங்கு பெறக் கற்கவேண்டும்.

இழுக்குடைய பாட்டாயினும் இசையுடன் அமையின் பெருமை விளைக்கும். இதனை ஔவையாரும் "இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று" என்றறிவித்தார். "ஆடிக் கறக்க வேண்டிய மாட்டை ஆடிக்கறக்க வேண்டும்; பாடிக் கறக்க வேண்டிய மாட்டைப் பாடிக்கறக்க வேண்டும்" எனும் பழ மொழியும் பாட்டின் திறனை விளக்கும். நுரையீரல் 1600 சதுர அடி விஸ்தீரணம் உளதென்பர். அது தினம் இரண்டங்குல

நீராவியைத் தள்ளவல்லது; 300 கன அடிக்காற்றை வெளியே தள்ளுகிறது; ஒரு மூச்சில் 500 கன அங்குலக் காற்றை விஷப் படுத்துகிறது. சாப்பாட்டிலும் ஏழுபங்கு காற்றே அதிகமாகும். எனவே, சங்கீதப் பயிற்சி யுடையவர்கட்குக் காற்று உள் சென்று வெளிவரும் அளவு மிக்கதாகும். ஆதலால் ஓசை யிட்டுப் பாடப்பயிற்சி வேண்டும். இதனையே அப்பர் சுவாமிகள் 'ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே" என்றனர். ஆங்காங்கு ஊன்றி நோக்குமிடத்து ஓசையின் பெருக்கு விளங்கும். அம்பி கையும் பாட்டாக நிற்கின்றாள். அவள் உறுப்பெல்லாம் பாட் டின் உறையுள் எனலாம். மலை, ஆறு, காடு, பொழில், கடல் இவற்றைக் காண்பான், பாட்டாகக் காண்பான். அங்கங்கும் பண்ணோசை எழுந்த வண்ணமாக அமைந்துளது. மக்கள் புலன்களின் இயலபு, பாட்டில் அமையவே அமைத்துள்ளார் என்பது பெரியோர் கருத்து. காண்டல், கேட்டல், உறுதல், சுவைத்தல், முகர்தல் முதலியன முற்றும் இயற்கை வழியில் இயங்குவனவே, இங்கு மனிதனே பாடப் பழகி விட்டால், உல கின் இன்பத்தைத் தானே பெறுவான்; இது இறைவன் கட்டளை யுமாகும். சித்த சக்தி ஓங்கும்; அது அன்பிற்குரிய வழியையே அடைவித்தலால் வாழ்வையும் பெருக்கும்.

இசையின் பயன் பலவாகும் அவை பண்டைக் காலத்தில் சண்டையிட்டுப் போர்க்களத்தில் வீழ்ந்தாரை அவரவர் மனைவி யர், போர்க்களத்தில் சென்று புண்பட்ட உடலைத்தன் மார்பகத் துச் சார்த்தி நோய் அகலப் பாடுவர். அப்பாட்டால் அவர்கள் நோயற்று இன்பமடைவர், என்பது புறப் பொருள் வெண்பா மாலையாகும். அமெரிக்காவில் மனக் கோளாறு, தேகக் கோளாறு, நரம்புக்கோளாறு உடையவர்களைப் பண்ணால்

(247-ம் பக்கம் பார்க்க)

துயரம்.

நமது சங்க உண்மை யன்பருள் ஒருவரும், தமிழ் மகனாரு மாகிய கும்பகோணம் புகையிலைப் பெருவணிகர் திருவாளர் E. S. மைதீன் இராவுத்தர் அவர்கள் அன்பர் களையும் நண்பர்களையும், உறவினர்களையும் வருந்தவிட்டுப் பிரிந்த செய்தி அறிந்து பெரிதும் துயருறுகின்றோம். அன்பு நிறைந்த உள்ளம், தொண்டு நிறைந்த தோற்றம், உண்மை நிறைந்த செயல் மலிந்த இவர்கள் பிரிவு தமிழ் நாட்டிற்கு சிறப்பாக நம் சங்கத்திற்கு ஓர் உண்மைப் பேரிழப்பாகும்.

காவிரியின் கரையில் இலக்கியம்.

புலவர். திரு. உ. பழநி முதலியார், M. A., அவர்கள்.

இலக்கிய மென்பது மக்கட் டொகுதிக் கெல்லாம் பயன்படும் பொருளை யுள்ளடக்கி இனிய வகையாற் சொல்லப்படுவது. எவ்வெப் பொருள்கள் மக்களுக்கு அழகைத் தோற்றுவித்து இன்பம் பயந்தனவோ, அவை யெவ்லாம் இலக்கியத்திற்குரிய பொருள்களாக அமைந்தன. புலவன் ஒரு பொருளின் பண்பினைத் தன் நுண்ணறிவு, கற்பனைத் திறம் இவற்றின் துணை கொண்டு உலகோர் வியப்பத் தன்னுள்ளஞ் சென்றவாறெல்லாஞ் சொற்கோவைப் படச் சித்திரித்துரைப்பதை இலக்கியத்துட் காணலாம்.

ஆற்று நீர் மக்களுக்கு உணவு வளத்தைத் தருகின்றது. அதனால் மக்கள் இன்ப நிலையிலிருந்து இனிய இலக்கியங் களைச் செய்வாராயினர். பசி யறியாது வளமுடனிருக்கும் நாட்டு மக்கள்தான் இன்னிசையிலுங் கூத்திலும் ஈடுபடு கின்றனர். உணவுச் செருக்கினாலேயே கவலையற்றுப் புல வர்கள் நூல் செய்தனரென்பதைச் சிலப்பதிகார உரைச் சிறப்புப்பாயிரத்து "பொப்பண்ண காங்கேயர் கோன ளித்த சோற்றுச் செருக்கல்லவோ, தமிழ் மூன்றுரை சொல்வித்ததே" என்பதனானும் அறியலாம். (தமிழ் மூன்று என்பது தமிழிலுள்ள இயலிசை நாடகப் பகுதி களைக் குறித்ததே யாகும்). உலக விலக்கியங்களை எண்ணி நோக்கின் வளமுடைய நாட்டைப் பொருளாகக் கொண்டு தோன்றியனவே மிகுதியாக வுள்ளன. மக்கள் ஆற்று வளத்தை இனிமையாகப் பாடி மகிழ்ந்தன ரென்பதைப் பரிபாடலிற் காண்கிறோம். எகிப்து நாட்டின் நாகரீகம் நைல் நதிக் கரையிலும், மெசபொடோமியா நாகரிகம் யூப்ரட்டிஸ், டைகிரிஸ் நதிக்கரையிலும், சிந்து வெளி நாகரிகம் சிந்து நதிக்கரையிலுந் தோன்றின வென்பதை வரலாற்று நூல்களாலறிகிறோம். இந் நாகரீகச் சிறப் பினையே அந்த அந்த நாட்டுப் புலவர்கள் செவ்விய பாட் டாலும் உரையாலும் இலக்கியமாக்கித் தருகின்றனர். இதனால் இலக்கியமென்பது இனிய நாகரீக அமைப்பை இடமாகக் கொண்டு திகழ்வதென்பது புலனாகின்றது.

ஆற்றில் வரம்பின்றி வரும் நீர்ப்பெருக்கைத் தன்னியல்பில் மாருத வரையறைக்குட்படுத்தி உலகியலொழுக்கத்திற்குப் பயன்படுத்திக்கொள்கின்றோம். இம்முறையே புலவர்களும் மக்கள் ஒழுகலாற்றை வரையறைப்படுத்தி அமைக்கின்றனர். வெள்ளம் உடலை வளர்க்கக்கூடிய உணவினைப் பெருக்குகின்றது. அவ்வாறே இலக்கியம் மக்களுடைய மன நீர்மையாகிய உள்ளத்துணர்வுகளை வரம்புசெய்து அறிவைப் பெருக்குகின்றது ஆகையால் உணவினை உளவாக்கும் ஆற்றிற்கும் உணர்வினை உளவாக்கும் இலக்கியத்திற்கும் உடம்பொடு உயிரிடை என்ன தொடர்புண்டோ அத்தகைய நெருங்கிய தொடர்புண்டு.

காவிரிக் கரையில் பிறந்து வாழ்ந்த புலவர்கள் அவ்வாழ்வின் பயனாக வியற்றிய இலக்கியங்களும், காவிரியாற்றினால் உளதாம் பயனை நேரிற் கண்டறிந்த புலவர்கள் அக் காட்சியின் பயனாக இயற்றியனவும், இவ்விருதிற இலக்கியங்களும் தோன்றுதற்கிடனாக எழுந்த வரலாற்று நிகழ்ச்சிகளும் காவிரிக் கரையில் தோன்றிய இலக்கியங்களாம். கோவூர் கிழார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், உறையூர் முதுகண்ணன் சாத்தனார், முதலியோர் சோழ நாட்டிலேயே பிறந்து அந்நாட்டைக் குறித்துச் சிறந்த இலக்கிய மியற்றினர். இளங்கோவடிகள் சேர நாட்டிற் பிறந்த புலவர். அவர் காவிரியைக் குறித்துப் பாடுகின்றார். இவ்விரு திறத்தாரையதும் காவிரியின் கரையில் தோன்றிய இலக்கியங்களே. சங்க காலத்திலிருந்து இந் நூற்றாண்டுவரை காவிரியின் கரையில் தோன்றிய இலக்கியங்களை யாராய்வோம்.

காவிரியாறு பாயும் சோழவள நாட்டில் தோன்றிய புலவர்கள் மனவளஞ் சிறந்திருந்தனர். அவர்கள் நாட்டுக்கும் மொழிக்குஞ் செய்த தொண்டு போற்றத் தகுந்தது. அவர்களுடைய பாடல்களுட் சிலவற்றை நோக்குவோம். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பகைமையால் மலையமான் திருமுடிக்காரியின் மக்களை யானைக்காலிலிட்டுக் கொல்லக் கொண்டுவந்து நிறுத்துகின்றான். கோவூர் கிழார் அப்போது அரசன் முன்னிற்கின்றார்.

குழந்தைகள் களிற்றினைக்கண்டு அழுதலை மறந்து நிற்கின் றனர். புலவர்க்கு உள்ளம் இரக்கத்தால் மீதூர்கின்றது. கிள்ளிவளவ! யானொன்று கூறுவேன். கேட்பாயாக. நீயோ புறுவின் துன்பமட்டுமல்ல; ஏனையோருடைய துன் பத்தையுந் தீர்த்த சோழனுடைய மரபில் வந்தாய். இம் மக்களின் தந்தையோ கற்றோரது வறுமையைக் கண்டிரங் கித் தன்னிடமுள்ள பொருளைப் பகுத்துக் கொடுக்கும் வள்ளலாவன். முன்பு அஞ்சி அழுத இக் குழந்தைகள் களிற்றினைக் கண்டு அழுதலை மறந்து, இம் மன்றத்தைக் கண்டு வெருவி நிற்கின்றனர் அரசர் பெரும! உன் னுடைய மேம்பாட்டையும் அவர்களுடைய தன்மையை யுங் கூறினேன். இனிமேல் நீ விரும்பியதைச் செய்க என்றார். அரசன் உளம் நெகிழ்ந்து அம் மக்களை விடு வித்தான். பிறிதோர் பாட்டில் இப் புலவர், புலவர் வாழ்க்கையினியல்பைத் தெரிவிக்கின்றார். சோழன் நலங் கிள்ளியிடமிருந்து இளந்தத்தனென்னும் புலவன் காரி யாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியிடந்தூது சென்றான். நெடுங்கிள்ளி புலவரை ஒற்றனென ஐயுற்றுக் கொல்லப் புகுந்தான். கோவூர் கிழார் இடை நின்று தடுத்து அரசே! புலவர் வாழ்க்கை எத்தகைய தென்பதை எண்ணின் நின் உள்ளம் உருகும். பழுமரத்தை நாடிச் செல்லும் பறவை போலத்தூரத்தைக் கருதாது வள்ளல்களைத் தேடிச்சென்று தம்முடைய தெளிந்த நாவினாலே செவ்விதாகப் பாடிக் கொடுத்ததை மகிழ்வோடேற்றுச் சுற்றத்தாரை யுண் பித்து, எஞ்சியதைப் பாதுகாத்து வைக்காது யாவர்க்கும் கொடுக்கும் புலவர் வாழ்க்கைப் பிறர்க்குச் சிறிதும் தீது கருதியதல்லவே! வள்ளல்களிடஞ் சென்று வருந்திப் பரிசில் பெறும் வாழ்க்கை யன்றோ புலவர் வாழ்க்கை என்று கூறி அப்புலவர் சிறிதுங் குற்றமுடையவர் அல்லர் எனத் தெரிவித்தார். அரசன் அப்புலவரைக் கொல்லாது விடுத் தான். அவ்வரசனிடத்திலேயே புலவர் தம் பெருமையினை யும் எடுத்தியம்புகின்றார். மன்னவ! புலவர்களெல்லாம் நம் போன்ற அரசர்களிடம் பரிசில் பெறுபவர்கள் தானே எனக் கருதாதே. "நண்ணார் நாண அண்ணாந்தேகி, மண் ணாள் செல்வரை நிகர்க்கும், நும்மோரன்ன செம்மலு முடைத்தே" என்கின்றார். அக்காலப் புலவரின் மனத் திண்மையை நோக்குங்கள், அரசர்கள் இருவர் மாறு

பட்ட காலத்து அறிவுரை கூறிப் போரைத் தடுத்திருக்கின்றனர். எட்டுத் தொகை நூல்களை ஆராயின் புலவர்களுடைய பரந்த உன்ளமும், அரசர்க்கு அறிவுரை கூறி நாட்டிற்கு நலஞ் செய்ததும் விரிவாக அறியலாம்.

பத்துப் பாட்டுள் பொருநராற்றுப்படையும், பட்டினப் பாலையும் காவிரியின் கரையில் தோன்றிய இலக்கியங்களாம். பொருநராற்றுப்படையில் கரிகாற்பெருவளத்தான் எளியாரையும் விரும்பி உபசரிக்குந் தன்மையும் அவன் புலவர்க்களிக்கும் உணவின் வேறுபாடுகளும், பரிசிலர்க்குத் தேர், யானை முதலியவற்றைக் கொடுத்தலும், பொருநர் பொற்றாமரை பெறுதலும், விறலியர் பொன்னரி மாலை பெறுதலும் கூறப்பட்டுள்ளன.

புலவர்கள் இவனிடைப் பல நாட்கள் தங்கியிருக்கின்றனர். பின்னர் வீடு செல்ல வேண்டுமென்னும் எண்ணமெழுந்து எம் நாட்டிற்கு யாம் செல்லட்டுமா என வினவ, எம்மை விட்டு அகலப் போகின்றீரோ வெனக் கோபித்து யானைகளைப் பிடியோடு வேண்டிய அளவு தருகின்றானென்கின்றார். பண்டைத் தமிழரசர்கள் புலவர் மாட்டு வைத்திருந்த பெருமதிப்பு என்னே!

பட்டினப் பாலையில் காவிரியின் வற்றாத வளஞ் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. கோள்கள் நிலை திரியினும் வான் பொய்ப்பினும் தான் பொய்யாமலைத் தலைய கடற் காவிரி என்கின்றார். காவிரியால் வளஞ் செழிப்பதைப் புலவர் "பொன்கொழிக்கும்" என்கின்றார், காவிரி பாய்தலால் செல்வஞ் செழிக்கின்றது. நெல் வீட்டின் முற்றத்தில் உலருகின்றது. அதனைத் தின்ன வருங் கோழிகளைக் காவலாக உள்ள பெண்கள் தங்கள் குழைகளை எறிந்து ஓட்டுகின்றனர். அக் குழைகள் தெருக்களில் கிடந்து சிறுவர்கள் சிறு தேருருட்டிச் செல்லும்போது தடுக்கின்றன. என்னே செல்வத்தின் பெருக்கம்! பலவகைக் குடிகளினிருக்கையும், காவிரிப்பூம் பட்டினத்தே ஆடவரும் மகளிரும் கடலாடி இன்பந் துய்ப்பதும், ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கட்கு புலி முத்திரை பொறித்து சுங்கங் கொள்ளும் முறையும் இனிது விளக்கப் பட்டுள்ளன. காவிரி கடலொடு சென்று கலக்குந் தோற்றத்திற்கு மலையை யணைந்துள்ள மேகத்தையும், தாயின் மார்பைத் தழுவிக் கிடக்கும் குழவியையும் உவமையாகக் கூறியுள்ளார்.

ஐம்பெருங் காப்பியத்துள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் காவிரியின் கரையில் தோன்றிய இலக்கியங்களாம். சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தில் காவிரியின் வளம் புலவர் நாவிற் பொருந்தி பாட்டாக வழிகின்றது. ஆற்று வெள்ளப் பெருக்கத்தால் தொழிலாளர் உள்ளம் கிளர்ச்சி யெய்துகின்றது. அவர்கள் பல தொழில்களி லீடுபடுகின்றனர். புலவர் பாட்டாக்கித் தருகின்றார்.

"உழவரோதை மதகோதை யுடைநீரோதை தண்பதங்கொள்
விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழிகாவேரி
விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தவெல்லாம் வாய்காவா
மழவரோதை வளவன்றன் வளனே வாழிகாவேரி"

புன்னை நீழல் புதுமணற் பரப்பில் கோவலனும் மாதவியும் அமர்ந்திருக்கின்றனர். காவிரியாறு செல்லும் கவினுறு தோற்றம் மாதவியினுள்ளத்தில் கவிதையை எழுப்புகின்றது. காவிரியினழகி லீடுபட்டுப் பாடுகின்றாள். வண்டுக ளாரவாரஞ் செய்ய, அழகிய பூவாகிய ஆடை போர்த்துக் கயலாகிய கண்ணை விழித்துப் பெண்மைத் தன்மையால் ஒதுங்கி நடக்கின்ற காவிரியே என்றும், மயில்கள் களிப்பு மிகுதியால் ஆடவும், குயில்களிசை பாடவும், மலர் மாலையானது அருகசையயும் செல்லுகின்ற காவிரியே யெனவும், சோழனுடைய வளநாடாகிய மகவைத் தாயாகி ஊழிதோறுங் காத்தலைச் செய்யும் காவிரியே யெனவும் காவிரியின் வளத்தையும் அதனுடைய பேருதவியையும் எடுத்தியம்புகின்றாள்.

மணிமேகலை என்னுங் காப்பியம் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை என்பவள் துறவுபூண்ட நிலையைக் கூறுவது. இதன் பதிகத்துள் காவிரிப்பூம் பட்டினத்திற்குக்காவற் றெய்வம் சம்புவெனவும், அவ் வேதுவால் அப் பட்டினத்திற்குச் சம்பா பதியெனப் பேர் வந்த தென்றும், காவிரி, காந்தமன் என்னுஞ் சோழன் வேண்டியபடி அகத்தியர் கமண்டலத்திலிருந்து புறப்பட்டு வந்ததென்றும், அது கடலொடு கலக்குமிடத்தே காவிரிப் பூம்பட்டினம் இருந்த தென்றுங் கூறப்படுகிறது.

இந்நூலுள் சுவையான பகுதிகள் பல உளவேனும் சிலகாண்பாம். சுதமதியும் மணிமேகலையும் பலருங் கண்டு வியப்பெய்த மலர்வனமடைகின்றனர். உதயகுமரன் மணிமேகலையைக் கைப்பற்ற மலர்வனத்திற்கு வரு

கின்றான். சுதமதி அஞ்சி மணிமேகலையைப் பளிக்கறையுட் புகுத்துகின்றாள் "மாதவருறைவிடம் நீங்கி மணிமேகலை ஈண்டு உற்றதென்" என வினவுகின்றான். அவனுக்கு நல்லறிவுண்டாகவும், காமத்தீ அடங்கவும் சுதமதி யாக்கையின் இழிவையும் நிலையாமையும் எடுத்துரைக்கும் பகுதி யாவரும் கவனிக்கவேண்டியதாகும்.

"வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கின் புலால் புறத்திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
புற்றடங்கு அரவின் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையாறு அழுங்கல்
தவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை இது"

வென்று உணர்வாயாக என்கின்றார்.

உதயகுமரன் சென்றபின்னர் மணிமேகலை பளிக்கறையினுள்ளிருந்து வெளியே வருகின்றாள். அவள துள்ளம் உதயகுமரன் பாற்சென்றது. இளம் பருவத் தளாதலின் பலர் காமம், காமம் எனக் கூறக் கேட்டிருக்கின்றாளே யன்றி அதனை இன்னதென அறிந்தாளில்லை. இப்போது சுதமதியிடம் தோழியே, "புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம், இதுவோ அன்னாய் காமத்தியற்கை" என வினவுகின்றாள். இஃது உளப்பண்பை இனிதுரைக்கின்றது. மணிமேகலை உதயகுமரனுக்கு அறிவுரை கூறித் தெருட்டும் பகுதி எல்லோருக்கும் துறவு நெறியை நினைப்பூட்டுகின்றது.

"பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்
மண்டமர் முருக்குங் களிறனை யார்க்கும்
பெண்டிர் கூறும் பேரறி வுண்டோ?
கேட்டனை யாயின் வேட்டது செய்ம்மே"

இத்தகைய செய்யுட்களைப் படிப்பா ரெவரும் நன்னெறியிலொழுகுதல் நிச்சயமாகும். இந்நூலை ஊன்றிப் படித்தால் உள்ளம் நன்னெறிப்படும். பிறத்தலும் பிணிப்பட்டிரங்கலும் மூத்தலும் இறத்தலும் உடைய திவ்வுடம்பெனவோர்ந்து நல்லறஞ் செய்யத் தூண்டும்.

ஆற்று வளமுள்ள மருதநிலப் பகுதியிலுள்ள மக்கள் இன்பத்திற் றிளைத்து ஆன்ற அறிவும் அமைதியும் உடைவர்களாக இருந்தனர். அதனாலேயே சமயத்துறைபற்றிய இலக்கியங் களெல்லாம் மருதநிலப் பகுதிகளிலே எழுவனவாயின. திருஞானசம்பந்தர் மருதநிலப் பகுதிகளின் வளத்தினைச் சிறக்கப்பாடுகின்றார்.

"மஞ்சாரு மாடமனை தோறும் ஐயமுள தென்று வைகி வரினும், செஞ்சாலி நெல்லின் வளர்சோறளிக்கொள் திருமுல்லை வாயிலிதுவே" என்றும்

"வேளாள ரென்பவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும், தாளாள ராக்கூரில் தான் தோன்றி மாடமே." என்றும் திருஞானசம்பந்தர் மருதநில வளத்தினைப் பாடுகின்றார்.

பிற்காலச் சோழர்களில் இரண்டாங் குலோத்துங்க சோழன்காலத்தே, சேக்கிழாரால் பெரிய புராணம் இயற்றப்பட்டது. பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ! எனப் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையால் பாராட்டப் பெற்றவர் நம் சேக்கிழார். பெரிய புராணம் சைவ மெய்யடி யார்களின் வரலாற்றைக் கூறுவது. பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய இப் புராணத்துள் நயமான பகுதிகள் சில காண்பாம். திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் எம்பிரானை வணங்க சுந்தரர் கோயிலுக்குச் செல்லுகின்றார். வழிபட்டுத் திரும்பும்போது பரவை நாச்சியாரைக் காண்கின்றார். அவரின் தோற்றம் இவருள்ளத்தே பல நினைவுகளை எழுப்புகின்றது. இது என்ன கற்பகத்தின் பூங்கொம்போ! மன்மதனின் பெருஞ் செல்வமோ! புண்ணியமே ஒருருவாக வந்ததோ! மேகத்தைச் சுமந்து வில்லுங் குவளையும் பவளமும் மதியும் தன்னிடத்தே தோன்றப் பெற்றிருப்பதோர் மணம் பொருந்திய கொடியோ! சிவனுடைய அருளே ஒரு வடிவெடுத்து வந்ததோ! அறியேன் என்று வியப்பெய்தினார். சீதையைக் கம்பன் "செஞ்சொற் கவியின்பம்" எனக் கூறி மகிழ்ந்தாற்போல பரவை நாச்சியாரை "சிவனருளோ" எனக் கூறி வியப்புறுகின்றார். எத்தகைய பெருங் காதலில் ஈடுபட்ட விடத்தும் இறையன்பு தலை தூக்கி நிற்கின்றது.

ஒட்டக்கூத்தர், விக்கிரம சோழன், இரண்டாங் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராச சோழன் ஆகிய மூவர் காலத்தும் விளங்கி மூவருலா வென்னும் அழ

கிய உலாவினைச் செய்தவராவர். "கோவையுலா அந்தாதிக் கொட்டக் கூத்தன்" எனப் புலவராற் சிறப்பிக்கப் பெற்ற வர். இராசராசன் உலாவைப் பாடி அரங்கேற்றியபொழுது இவருக்கு அவ்வரசன் ஒரு கண்ணிக்கு ஆயிரம் பொன் கொடுத்துச் சிறப்புச்செய்தானென்பதைக் "கூடனராதி பன் கூத்தனெதிர் நண்ணி, யொர்கண்ணிக் காயிரம்பொன் னீந்த உலாவும்" என்பதனு லறிகின்றோம். சோழர் வரலாற்றை அறிதற்கு இந் நூல் பெரிதும் பயன் படுகின்ற தாகலின் இதனை வரலாற்றிலக்கிய மெனலாம்.

மூன்றாங் குலோத்துங்கன் காலத்திலங்கிய கம்பர் தமது இராமாயணத்தில் கங்கையைக் கூறும் போதெல் லாம் காவிரியை உவமையாகக் குறிக்கின்றார். உவமைப் பொருள் உயர்ந்ததாக இருக்கவேண்டு மென்பது விதி. இதனால் கம்பர் காவிரி நாட்டின் அழகை உள்ளவாறனு பவித்து அதற்குரிய பெருமையினைத் தன் இலக்கியத்திற் றந்தாராவர். பரதன் நாட்டை விட்டுக் கடந்து செல்லுந் தன்மையைக் கூறவந்த கம்பர் "காவிரி நாடன்ன கழனி நாடொரீஇ" என்கின்றார். "கங்கையிற் புனிதமாயகாவிரி" எனப் பிறிதோரிடத்திற் குறிக்கின்றார்.

திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து தமிழிலக்கியங் கள் பல இயற்றியவர் வடநூற் கடலையும் தென்னூற் கடலையும் நிலை கண்டுணர்ந்த மாதவச் சிவஞான யோகி யாவர். அவர்க்குப்பின் அம் மடாலயத்திலிருந்து தமிழ் வளர்த்தவர்களுள் தலையாயவர் பெரும் புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யாவர். அவருடைய மாணவர் வேத நாயகம் பிள்ளை அவர்கள் தமிழ்த்தொண்டும் பாராட்டற் குரியது.

மேற் கூறியனவே யன்றி திருக்கோவில்களிலுள்ள கல் வெட்டுக்களும், ஓவியங்களும், சிற்பங்களும் காவிரி யின் கரையில் தோன்றிய எழுதா இலக்கியங்களாக மிளிர் கின்றன. ஒருவாற்றான் காவிரிக்கரையின்கண் தோன்றிய இலக்கியங்கள் தொகுத் துரைக்கப்பட்டன. அவற்றைக் கற்றுத் தமிழ் வளம் பேணுதல் தமிழரின் தலையாய கடனாம்.

குறிப்பு:— திருச்சிராப்பள்ளி அனைத்திந்திய வானொலி நிலையத்தில் 17—10—1949-இல் பேசப்பெற்றது.

புலவர் புணை போன வரலாற்றின் உரை நடை.

வித்துவான் திரு. அடிகளாசிரியர்,
(தி. ஆ. அ. தே. கரந்தைப் புலவர் கல்லூரி)

சென்ற திங்கள் தமிழ்ப் பொழிலில் 'புலவர் புணைபோன வரலாறு' என்ற நூலை ஓலைச் சுவடியிலிருந்து எடுத்தெழுதினேன்; இப்பொழுது அந்நூலிலிருந்து அறிந்தவற்றையும் வேறு சான்றினால் அறிந்தவற்றையும் சேர்த்து அவ்வரலாற்றை உரை நடையாய் எழுதிக்காட்டத் தொடங்குகிறேன். இவ்வரலாறு அப்புலவரே கூறும் நடையில் அமைந்துள்ளது. சின்ன சேலம் என்னும் சேலத்தினைக் கங்காதரச் செழியன் என்னும் குறுநில மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு வெங்கடாசலன் என்பவன் நல்லமைச்சனாய் விளங்கினான். இவர்கள் ஆட்சியில் வேளாளர் ரெட்டியார் முதலான பலவகைச் சாதி மக்களும் நன்றாய் வாழ்ந்துகொண்டிருந்தனர். அப்பொழுது இந்நிலவுலகத்தை முற்றிலும் ஆளக் கருதிய 'டீபு' என்றழைக்கப் பெறும திப்பு மன்னன் நாடெங்கும் மேவி நாடுகளை யெல்லாம் தழல் மடுப்பித்துச் சீரகற்றி மக்களுக்குத் துயர் விளைத்து எவ்விடத்தும படைகளை நிலைபெறச்செய்து தியாகதுர்க்கம் கோட்டையில் வந்து தங்கினான். தங்கிய அம்மன்னன் தன் அலுவலாளரில் காதரல்லிகான், திவான் கிருட்டினராயன், கேசவராயன் என்னும் மூவருடன் இரண்டாயிரம் படைகளைக் கூட்டிவர விட்டு 'சேலநகர் சேர்ந்து செழுந்தனங்கள் வாங்குவீராக' என்று கூறிச் சேல நகருக்கு அனுப்பினான்.

அவர்களெல்லாம் மறலியென்று சொல்லும்படி மண்ணுலகம் நடுங்க வந்து சேல நகரத்தைச் சார்ந்து எட்டுத் திக்கும் சூழ்ந்து எங்கெங்கும் பாராவாய் நின்று ஒருவரும் வெளியேறாத படி முற்றுகை புரிந்தனர். அப்பொழுது, அரசனாகிய செழிய தரையனும் அவனுக்கு உறுதுணைவரான கூகையூர் (குகையூர்)ச் சீமையாரும், கோட்டை யிறைவாச நல்லூர் நாட்டாரும், கல்லைநகர்ச் சீமையாரும், ஆறை நாட்டாரும் மற்றுள்ளவரும் தத்தளித்து ஏங்கி நின்றனர்.

அப்பொழுது வல்லவனும் செழியதரையனுடைய தளவாயு மாகிய வெங்கடாசலன் என்னும் அமைச்சன் திப்புவால் அனுப் பப்பட்ட மூவரையும் எதிர்கண்டு இல்லிற் கழைத்து வந்து பன்னிரண்டாயிரம் (ரூபாய்) தருவதாகக் கூறி, அவர்கட்கு நல்ல விருந்து செய்து, பதினுயிரத்தை மிக முயன்று சேர்த்துக் கொடுத்துப் பாக்கி இரண்டாயிரத்தைப் பின் அனுப்புதாகக் கூறினன்.

அவர்கள் அத் தொகையைப் பெற்றுக்கொண்டு பாக்கித் தொகைக்கு யாரையாவது புணையாய் அனுப்பவேண்டும் என்று கூறினர். அப்பொழுது கங்காதரச் செழியன் என்னும் அரசன் தன் குடிமக்களைப் பார்த்து 'யாராவது ஒருவர் இவர்களுடன் பாக்கி இரண்டாயிரம் செலுத்தும் வரைப் புணையாய்ப் போக வேண்டும்' என்று கேட்டுக்கொண்டான்.

இம் மொழியினைக் கேட்டவுடனே மறையோரெல்லாம் தம் வாய்க் குளறியிட்டுத் தத்தளித்தார்; உறவின ரெல்லாம் உண்ணடுங்கி மறைந்தார்; கொல்லரும் நாய்க்கரும தம் அரசனைக் காணக் கூசினர்; அரச காரியம பார்க்கும சாமாசிக ரெல்லாம் அச்சத்தால் தன் நினைவிழந்து நிலததிற் படுத்து உணர்ச்சியற்றனர். அப்பொழுது, காராளர் தங்குலத்திற் பிறந்த காவலனுகிய செழிய தரையன் * அருணுசலக் கவிஞன் என்று பெயர் பூண்ட என்னை நோக்கி வாராய் என்று அழைத்து மனங்குழைந்து 'அப்பா அருணுசலக் கவிஞனே' இததகைய துன்பமான காலத்தில் எப்பேர்பபட்ட உறவினர் முதலானவ ரெல்லாம் கல் மனதாய்க் கவடு செய்தனர் எவர்களும் இவர்கள் பின் புணையாய்ப் போக எண்ணவில்லை; யானே புணையாய்ப் போகலாமென்ருலோ ஊரலைந்து போகும்; ஆகையால், உன் மனத்தைத் தெளியும்படி திடப்படுத்திப் புணையாய்ப் போயிருப் பாய் என்று நல் வசனமாக நயத்தோடுரைத்திட்டான்.

---

* இப் புலவர் பாடிய **ஆறை நாட்டுலாவால்** இவர் பெயர் அருணுசலக் கவிஞன் என்று தெரிகின்றது. சின்ன சேலத்தில் இக் கவிஞரைப்பற்றி விசாரித்ததில் இவர் செங்குந்த மரபினர் என்பது தெரிய வந்தது. **ஆறை நாட்டுலாவின்** முற்பகுதி பின்னுல் தரப்பட்டுளது.

யானும் அதற்கு உடம்பட்டேன்; என்னை திப்புவின் தளவாயிடத்தில் புணையாய் ஒப்புவித்துச் சேலத்திற்கு வந்த ஆபத்தினை நீக்கி அரசன் காத்திட்டான். யானும் விளக்கைப்போல் எரிகின்ற கண்ணையுடைய திப்பு மன்னனிடம் சென்று அவனுடைய உள்ளம் குளிரும்படி நன் மொழியை ஓதினேன். அவ் வரசனும் எனக்குக் காவல் வைத்து 'இரண்டாயிரம் ரூபாயைக் கண்டிப்பாய்க் கொடுத்துவிட்டு நும் ஊர்க்கு ஏகுக' என்று கட்டளையிட்டான். அப்படி அங்கிருக்கும் (தியாக துர்க்கத்தில்) காலத்தில் அம் மன்னனுக்குச் செல்லவேண்டிய பணம் செல்லாமலிருந்தது. ஓர் நாள் அம் மன்னன் என்னை நோக்கிக் 'பகை மன்னருடைய படை நம்மேல் வரத் தொடங்கியுள்ளது; ஆகையால், நீ அனந்தகிரியில் தங்கியிருந்து செலுத்தவேண்டிய பணத்தைச் செலுத்திவிட்டு நும் மூர்க்குச் செல்க' என்று கூறி என்னை அனந்தகிரிக்கு அனுப்பிவிட்டான். யானும் அங்கு சென்று இராமய்யருடைய வீட்டிலே உணவு உடை வெற்றிலைப் பாக்கு முதலியன வெல்லாம் பெற்றுக்கொண்டு அங்கிருந்தேன். அது வரையும் பாக்கிப்பணம் செல்லாமையால் திப்பு மன்னனைச் சார்ந்தவர் என்னைப் பலவிதமாய் வருத்திச் சங்க கிரிக்கு அனுப்பினர். பின்னர் அங்கிருந்து சீரங்க பட்டணத்திற்கே என்னை அனுப்பிவிட்டனர். அங்கு என்னைப் பற்றித் திப்பு மன்னனிடம் சொல்ல அவன் சினத்துடன் அவனூரிலுள்ள கிட்டங்கியிலே தள்ளி விலங்கு மாட்டுக என்று கூறினான். இந் நிகழ்ச்சியை யறிந்த சங்ககிரிச் சித்தய்யனும், தீர்த்தகிரிச் சின்னையநாயக்கனும் மனமிரங்கி, இரண்டாண்டாய் எனக்குச் செலவான செலவு தொகைக்கு இருநூறு ரூபாயும், அரசனுக்குக் கொடுப்பதாக இருநூறு ரூபாயும், இசுமால்கான் என்னும் அலுவலாளனுக்குக் கொடுப்பதாக நாற்பது ரூபாயும் ஆக நானூற்று நாற்பது ரூபாயைத் தாங்களே தருவதாகக் கூறி ஏற்றுக்கொண்டு என்னை ஊர்க்குச் சென்றுவரும்படி அனுப்புவித்தனர். யானும் தென் சேலம் வந்து செழியதரையனுக்கு இந்நிகழ்ச்சியை அறிவித்தேன். இதனைக் கேட்ட செழிய தரையன் "உன் செலவு எந்தனக்கு ஒவ்வாது முன் சொன்ன பொன் தருவதில்லை; போகுமிடம் போதி; இதை நாட்டிலே கூறிப் பிச்சை யெடுத்து நிலுவைப்பணத்தைச் செலுத்துக" என்றான். ஆகையால் அப்பணத்தைத் தருவதற்காக யான் நாட்டில் பிச்சையெடுக்க வந்துள்ளேன்.

---

* புலவர் இரண்டாண்டுவரைப் புணையிருந்ததாக ஆறை நாட்டுலாவால் தெரிகின்றது.

ஆகையால் மானமுடையவரே மதியுடையவரே தானமுடையவரே தவமுடையவரே கல்வி யுடையவரே செல்வ முடையவரே திரு வுடையவரே யான் கூறிய கவியின் பொருளுணர்ந்து என்றன் புணைக் கடனைத் தீர்க்க ஆராய்ந்து அருள வேண்டும்

ஆறைநாட்டுலா.

சீராரும் ஆறைச் செழித்த அனந்தகிரிப்
பேரான நாட்டின் பெருமையற்கு ஏரான
பன்னிரண்டு நாட்டார்க்கும் பண்பான யெட்டெட்டு
நன்னிலத்தை ஆள்கின்ற நாயகர்க்கும் = பன்னுதமிழ்
அருணு சலக்கவிஞன் அன்பாக விண்ணப்பம்
திருமருவுஞ் சேலத்தில் டீபுமன்னன்—உருமேவுங்
காதரல்வி கானுடனே கனத்தகிருஷ்ண ராயனையுங்
கோதில் படையிரண்டா யிரங்கூட்டி—நீதிவிட்டு
சேலநகர் சேர்ந்துச் செழுந்தனங்கள் வாங்குமென
ஆலமெனச் சீறி அவர்வந்தே—ஞாலமதின்
கூற்ற மெனவந்துக் கொள்ளமுயல் போழ்தின்
ஏற்ற பணநிலுவைக் கென்னையே—சேர்த்தவன்பின்
கூட்டி யனுப்பக் குறைப்பணத்துக் கியான்கிரியாய்
நாட்டி லிரண்டாண்டு நானிருந்தேன்—ஈட்டுபணம்
நானூறு ரூபாயும் நாங்கள் தருவமெனத்
தேனூரும் சங்ககிரிச் சித்தயனும் = மானபரன்
கல்வி நெறிதன்னிற் கவினறிவிற் றீரத்தில்
தொல்புவியிற் கீர்த்திபெறுந் தோன்றலவன்—எல்லவர்க்கும்
நன்மைபுரி தீர்த்தகிரி நாயக்க னிவர்புணையா.

குறிப்பு:—ஏட்டுச் சுவடியிலிருந்து இவ்வளவே எடுத்தெழுதி யுள்ளேன்.

உரை நுட்பம்.

திரு. ந. சுப்பராய பிள்ளை அவர்கள், சிதம்பரம்.

பல அருங் கருத்துக்களை உள்ளடக்கி உணர்வினின் வல்லோர் யாத்த தமிழ் நூற் செய்யுட்களுக்கு, உரையாசிரியரை யுள்ளிட்ட நுண்மாண் நுழைபுலமுடையார் பலர், ஏனையரு முணர உரை வகுத்துள்ளனர். அன்னாருடைய உரைகள் தோன்றலிலதேல் நூல் பயில்வோர் குன்று முட்டிய குரீஇப் போல்வரென்பது புகழுரையன்று. அறிவு யாவர்க்கும் பொதுக் கருவி. அவரவர் தம தம தறிவறி வகை வகை நூற்கருத்துக் களை வெளியிடுபவராவர். பின்னுள்ளார்க்கும் இது ஒப்ப முடிந்தது. "ஒன்று நன்றென வுணர்ந்தொருவன் சூழுமேல்— அன்றென ஒருவனுக் கறிவு தோன்றும்". பழந் தமிழ் நூற் களுக்கு உரையிட்ட உரையாசிரியர்கள் கருத்து மாறுபட்டுப் பிற வுரையை மறுத்தவிட மெல்லாம் சிறப்புத் தோன்றவே யன்றித் தம்மினுங் குறைபாடுடையரென இகழ்தற் கன்று. ஆராய்ச்சித் துறைகளால் தமிழ் வளர்ச்சி பெறும் இஞ்ஞான்று பலரும் நூலுரைகளில் உள்ளடங்கிய பல அருங் கருத்துக்களை வெளியிட்டு வருதல் பாராட்டத் தக்கது. உரை யாசிரியர்கள் பயில்வார்க்கு நுண்ணறிவு பெருகவேண்டி பல நுட்பங்களைத் தம் உரைகளில் பயில விட்டுள்ளனர். எடுத்துக் காட்டாக ஈண்டொன்று நோக்குவாம்.

சீவகசிந்தாமணி—கேமசரியாரிலம்பத்துள், 'மடமாமயிலே' எனத் தொடங்கும் செய்யுட்கு உரை வகுத்த ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'மொழி சோர்ந்தனள்' என்ற பகுதிக்கு, 'காரியத்தை மறந்தாள்' எனப் பொருள் கூறியுள்ளனர்.

அதற்கு 'மேற் கூறமாட்டாது தளர்ந்தாள்' என எளிதில் பொருள் புலப்படுமாறு கூறாது, அதனை விடுத்து 'மறந்தனள்' எனப் பொருள் கொண்டது எற்றுக்கு? என்பது சிந்திக்கத் தக்கது.

தெளிந்திருக்கும் நிலை 'உணர்வு' எனப்படுவது. தெளிவற்ற நிலை 'மறதி' எனப்படுவது. ஆதலின் மறதியை உடல் கொளுயிர்க்குணம் என வழங்கினர். கேமசரி உணர்வுடன் விளித்துக் கூறுமிடையே 'உணர் விழந்தாள்' என்பதே, நூலாசிரியர் தெரிவித்தது. சோர்தல் ஈண்டுச் செயலறுதலாகி உணர்விழந்த நிலையை யுணர்த்தியது. அந் நிலையில் 'சோர்ந்தனள்' என்னுஞ் சொற்கு 'மறந்தாள்' என 'உணர்வற்ருள்' என்னும் பொருளில் வழங்கி யிருத்தல் உய்த்துணர் வார்க்குப் புலனுகும். ஆகவே ஈண்டுச் 'சோர்ந்தாள்' என்னுஞ் சொற்கு 'மறந்தாள்' எனப் பொருள் கூறியது உணர் விழந்தாள் என்பதை வெளிப்படுத்தவே. அதனைக் காரியமாக்கி உரை வகுத்த அவ்வுரை யாசிரியரின் உரை நுட்பம் அறிந் தின்புறற் பாலது. இவ்வாறே ஆசிரியர் பரிமேலழகரும் (குறள்—55.) 'சோர்வு—மறதி' என அகலங் கூறியதும் அறிதற் பாலது.

யாழ் நூல்.

பேராசிரியர் விபுலானந்த அடிகளார், பதினுன்காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது. தோற்றம் பொலிந்தது.
விலை மலிந்தது.

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு.

சைவமணி திருவாளர் சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்கள்
தாமியற்றிய திருக்குறள் சொல்லடைவை அரங்கேற்றியபொழுது
அன்பர்கள் கூறிய பாராட்டுச் செய்யுட்களுட் சில.

தேனுர் திருக்குறளின் செஞ்சொல் அடைவுவளம்
காணீர் எனவகுத்துக் காட்டினுர்-பேனுவின்
ஆற்றலுயர் சாமிவே லாயுதனின் நுண்ணறிவைப்
போற்றிடுவோம் வாழும் புகழ்.

ஆய்ந்தாய்ந் தலசினுர் அம்மா திருக்குறளை
வாய்ந்தபடி யெல்லா வகையாலும் ஓய்ந்தபா
டில்லா வகையுழைக்கு மெங்கள் வேலாயுதனுர்
எல்லாரு மெச்ச வினிது.

"தேவார ஒளிநெறிக் கட்டுரை"
ஆசிரியர்
திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள், M. A.,

திருக்குறளின் சொல்லடைவைத் தேர்ச்சியுட னுய்ந்து
பெருமுயற்சி யாற்ருெருகுத்த பேறீர்-விருப்பமுடன்
பேரறிஞர் பல்லோர் பெருமகிழ்வோ டாதரித்துக்
கோரிடுவர் வாங்கிக் கொளற்கு.

பேரறிஞர் பல்லோர்வாழ் பெற்றியுள சென்னைக்கண்
பாரறியச் சொல்லடைவைப் பாராட்டிப்-பேரரங்கில்
ஏற்றியதற் கேற்ப வியைந்திடுக வின்பமுறப்
போற்றிப் பொருளடைவைப் போர்த்து.

சாலச் சிறந்ததிரு சாமிவே லாயுதநின்
சீலத்தைச் சீர்தூக்கிச் செப்பரிது—ஞாலத்தில்
நன்மை பலவோங்க நாடோறுஞ் செய்துவாழ்
தொன்மை யுடன்வாழுந் தொண்டு.

திரு. த. கோ. நடராசன்,
தஞ்சாவூர்.

தொன்னூற் குறட்பாக்குச் சொல்லடைவு தாக்
கென்னு
நன்னூல் வியந்தளித்தான் நற்கேள்விப்–பின்னூலுந்
தோய்ந்த பனிமொழிவே லாயுதமால் சொற்சுவையை
யாய்ந்தபெரு தீங்கடலி லாழ்ந்து.

வாம மணிகுறட்கு வள்ளுவர்சொல் வைத்தபொருட்
கேம மணிவிளக்கா யேற்றியநூல்–சாமிவே
லாயுதன் சொல்லடைவு கற்கண்டு வானமுதுத்
தோயுங் கனியிரதச் சோறு.

திரு. சொ. அரங்கசாமி பிள்ளை,
Rtd. Revenue Inspector,
கும்பகோணம்.

பரத சாத்திரம்.

இந் நூல் நாட்டியம் பழகுபவர்கட்கும், பழக்குபவர்கட்கும் இன்றியமையாத சிறந்த அரிய நூலாகும். 182 பக்கங்கள் கொண்டது. பாவ வியல், இராக வியல், தாள வியல், ஒழிபியல் என நான்கு இயல்களும் தெளிவுரையும், அடிக்குறிப்பும் உள்ளன.

விலை ரூ. 1—8—0
(அஞ்சற் செலவு வேறு.)

திருமுருகாற்றுப் படை.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

அறநெறியான் வருவதாய இன்பம் அறிவினுல் வளரு மாதலான், அறம் பொருளின்ப வீடுகளாகிய இம்மை மறுமை இன்பங்களை எய்துங் காதலே மக்கட் பிறப்புற்ற அறிவுடைய உயிர்கட்கு உரித்தாகும். அறம் பொரு ளின்பம் பற்றி நுதலும் உலகநூல்கள், நல்லின்ப வாழ்வின் பேற்றினையும், வீடென்னும் பொருண்மைசாற்றும் அறிவு நூல்கள் வீடுற்ருருறு மின்ப நிலையினையும் சிறப்பாக உணர்த்துவதினுன், அறிவு வளர்ச்சி, அறமுதனுற் பொருள் பயக்கும் நடைநெறியானுளதாதல் திண்ணம்.

மெய்யின்பத்திலே காதலுடைத்தாய உயிர் தானே இன்பம் நுகரும் ஆற்றலில தாதலால், அது இன்ப னுகர்வு கருதி உடலோடு தொடர்பு கொண்டு பொறிபுலன்க ளானும், கரணங்களானும் சுவையார்கின்றது. நிலையறு வாழ்க்கையில் நேர்ந்த இன்பத்திடையே, பொதுவாக, உவர்க்கத்தக்க துன்ப முடிவு காணப்படுதலான், அறிவா ளுன்ற நல்லுணர் வாட்சி யுடையோர், கொடுவினை நோய் விளைவுக்கு நிலைக்களனு யுள்ள உடலை வெறுக்கத் தலைப் பட்டு, ஐம்பொறியும் ஆர நுகர்ந்த இன்பம் போலித் தன்மைத்தென உணர்ந்து, இன்னு வுலகில் இன்பப் பேறுறல் அருமைப் பாடுடைத்தென்பர். ஆயினும் புலம் பிரிந்து வாழும் செலவும் உலகியல்பும் அறிந்த மேலோர், இவ் வின்னுமையை இனியவாகக் காணக் கருத்து கொண்டு, உலகியற்பொருள்களில் ஒன்றித் தோன்றும் இறையின் உண்மைத் தன்மையினை மதி நுட்ப மோடு டாடிய நூலோடுடைய திட்பத்தால் கருதுவர். பின்னர் இறைவற்கு உலகம் உருவ மென்றும், உலகத்தின் கண் நிலைபெறும் உயிர்களுக் கெல்லா முயிரென விருப் போன் இறைவனென்பதூம், உலகியற் பொருள்கள் யாவும் இறையுண்மை கூறும் திறத்தனவென உன்னுவர். உன்னியவழி, அன்னவர், உயிர் வாழ்க்கையினை இயற்கை

நலனும் பயனு முடையதாக்க, பொறியிடை நிலவும் புலன்களால் பொருளுண்மை யுணர்ந்து, அப் புலன் களை விடுத்து, அறிவு கருவியாக, பேரின்ப நிலைக்களனாய பரம் பொரு ளிடத்தே மெய்யின்பம் நுகரும் நெறியினைத் தெளிந்து அமைதியான் உரனுடையராவர்.

அறியாமை யகற்றி மெய்யறிவைப் பெற விழையும் உயிர், இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் தனது உண்மை நிலையினை அடையும் நெறியினைக் கூறும் அறிவி னூல்களுள், மிகச் சிறந்தது திரு முருகாற்றுப் படையாகும். இருமைக்கும் இன்பமுற வழிகாட்டும் இந்நூல், அறப்போர் வாழ்க்கையில் இறையருள் நிலையினது அமைப்பினை விளக்கமாய் உணரும் வகையும், அத் திருவருள் விளக்கத்தோடு மெய்யுணர்வுடன் இறை வழி பாட்டு முறையால் அன்புபடச் செய்யும்தவவொழுக்க நிலையினையும். உள்ளக் கிளர்ச்சி நிலையையும் உணர்த்துகின்றது. திருமுருகாற்றுப் படை என்பது அணங்குடை முருக னிடத்தில் அருளைப் பெற விழைவாரை நெறிவழிப் படுத்தலெனப் பொருள்படும். வீடு பேறுபெற்ற புலவர், அது பெறுதற்குச் சமைந்தானோர் ஞானப் புலமையாளரை முருகனிடம் ஆற்றுப் படுத்துதலை இப்பாட்டு உணர்த்து கின்றதினுன், பாடுவோரும், பாடப்படுவோரும், பாடும் பொருளாகிய பாடாண் பகுதிகளும் கடவுட் டன்மை மேவி விளங்குதல் கண்கூடு. கடவுட் டன்மை யறிந்து, ஞானம் தெளிந்த வழி, விழுப்பமெய்தும் தகுதியுடையார், பெரும்பாலும் புலவரானதினுன், அப் புலவன் மார் வேண்டும் விழுமிய பரிசில், பேராவியற்கை யாகிய வேண்டாமை யென்னும் வீடு பேற்று விழுச் செல்வ மென்பது துணிபாயிற்று. இத்தகைய விழுச் செல்வம் புலவர்க் குரித்தாதல் 'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே' (தொல்காப்பியம்) என்பதற்கு விளக்கம் செய்யப் புகுந்த உரை யாசிரியர் நச்சினார்க்கினியர் 'ஒரு தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட, ஒரு புலவன் வீடு பேறு முதலிய பரிசில் வேண்டலின், அவை தம்மின் வேறுகிய ஒரு தலைக் காமமாகிய கைக்கிளையோ டொத்தலிற் பாடாண் டினை கைக்கிளைப் புறனாயிற்று' எனக் கூறுமாற்றான் தெளியப்படும்.

தலைவ னொருவனிடத்துச் சென்று தன் அவலத்தைப் போக்க மிக்க பரிசுபெற்ற ஒரு இரவலன் தான் பெற்ற பெரு வளத்தை, வழியில் எதிர்ந்தோராய வறுமைப் புலவர்க்கு எடுத்துக்கூறி அவரையும் தன்னைப் போற் சென்று பெறுமாறு, அவ் வாற்றிற் குரிய தலைவன்பால் உய்த்து உதவி செய்யும் மனப் பாங்கும், உள்ளக் கருணையும் ஆற்றுப் படையின் உட் கோள்களாகும். இத்தகைய ஆற்றுப் படைச் செய்யுட்கள் பத்துப் பாட்டிலும் பதிற்றுப் பத்திலும், புற நானூற்றிலும் பெரு வரவிதாய்க் காணப்படுகின்றன. ஆற்றுப்படை கூறுதற் குரியார், பாணர், கூத்தர், பொருநர், விறலியர், புலவர் முதலியோராவர். இது,

'தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதரேத்திய துயிலிடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத்தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறார்க்கறிவுறீ இச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்'

என தமிழியல் தெரிக்கும் தொல்காப்பியத்தானும்,

'புரவலன் பரிசு கொண்டு மீண்ட
இரவலன் வெயிறெறூஉ மிருங்கானத்திடை
வறுமையுடன் வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கந்தப்
புரவலன் நாடூர்பெயர் கொடை பராஅய்
ஆங்கு நீசெல் கெனவிடுப்ப தாற்றுப்படை
ஓங்கியவது தானகவலின் வருமே'

எனவரும் பன்னலம் தவழும் தகவுடைய பன்னிரு பாட்டியலானும் காண்க.

சங்கம் மருவிய பத்துப் பாட்டுள், திருமுருகாற்றுப் படை, பொருந ராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை என்பன அகவற் பாவால் அமையும் அழகும் மரபும் வாய்ந்தன. அவற்றுள் திரு முருகாற்றுப்படை யென்பது, பொருநர், பாணாற்றுப் படைகள்

போல அப் பெயரான் வழங்கலுறுது, முருகனிடத்து ஆற்றுப் படுத்தலென்னுங் கருத்தில் பாட்டுடைத் தலைவன் பெயரொடு சார்ந்து வழங்கி வருவதாயிற்று. ஆற்றிடையெதிறுரும் இரவலர்பொருநரும் பாணருமாகலின், அன்னவர்களை யாற்றுப் படுத்திக் கூறும் பாக்களும் ஆற்றுப் படுத்தப் படுபவர்களது பெயர்களிலானே அமைவதாயிற்று. திரு முருகாற்றுப் படையுள் இறைவன் தலைவனுகற் பால தாய நிலை யொன்றே நுவலப்பட்டதன்றி இறைபால் செல்வாரது நிலையினைப் பெரும் பான்மையாகக் கிளக்கப் படவில்லை. கூர்ந்து சிந்திக்கின், திருமுருகாற்றுப் படைக்குப் பொரு ளாயினரோடு எக் காலத்துக்கும் எவ்வெவர்க்கும் இயைபு முள்ள தென்பதும் சற்று அறியப் படும். மற்றும் இதனில் பாட்டுடைத் தலைவரும் இரவலரும், அவரை வழி படுத்து பவரும் என்றும் முளதாய நீர்மையான், இறைவன் மேலதாய் வழங்கும் திரு முருகாற்றுப்படை பத்துப் பாட்டின் தலைப் பாட்டாக மிளிரும், வைப்பு முறையின் சிறப்பு வழக்கு புலனுதல் கண்டு கொள்ளப்படும். இவ்வாறு தலைச் சிறந்து விளங்கும் திரு முருகாற்றுப் படையை சிவப்பிரகாச அடிகள் 'பாவுள், முன்னுற வந்து நிற்கும் முருகாற்றுப்படை' எனக் குறித் தருளியது ஈண்டு நினைவு கூரற் குரித்து. பிற ஆற்றுப் படைகளில், ஆற்றுப் படுத்துவான், பாடுபடாது தனது இன்மை தீர ஒரோவழி பரத்தின் கருணையால், பொருளினைப் பெற்ற நிலையிலும், அன்னுரது பழைய வறுமை நிலை மேலிடுகிறதே யொழிய, அன்னவருக்கு வீடு பேற்று விழுச் செல்வம் வந்து சார்கிற தில்லை யென்பது தெருளற் பாலது. ஆனல் யாண்டும் கடவுட் டன்மையே சிறந்து விளங்கா நிற்கும் திரு முருகாற்றுப் படையுள், ஆற்றுப் படுத்துவார், பாடாண் ஒழுக்கத்தான் வீடு பெறுந் தகுதியும் தவமுமுடைய கேடில் விழுச் செல்வரென் பதூஉம், அன்னவர் இறையை இரப்பவை வேண்டாமை யென்னும் வீடு பேறும் அதனை அளிக்கவல்ல தவ ஞான விழுச் செல்வமு மென்பது எளிதே துணிந்து கொள்ளப்படும்.

திரு முருகாற்றுப்படை எனும் மெய்ந் நூலுக்கு இறைவன் தலைவ ராதலான், உன்னற்கரிய அவரது பெருமை முழுவதூஉம் அளந்தறிதல் மன்னுயிர்க்கு

அருமையாகும். எனினும் 'அவரைப் புலவரேறே....... புரையு நரில்லாப் புலமை யோய்!' என விளித்துக் கூறிய திலிருந்து புலமை யென்பது மெய் ஞானச் செல்வம் என உணர்ந்து கொள்ளப்படும். தீது தீர் திரு வீற்றிருக்கும் இத்தகைய அருட் புலமைச் செல்வத்தை வழங்குபவர் அவர் தா மென்பதூஉம் பெறப்படுகிறது. வீடு பேற்று விழுச் செல்வத்தை வழங்குபவரது உண்மை நிலை யறிதற்கு உறு கருவியாய் எக்காலும் நின்று பயன் றந்து வருவது இயற்கையே யாகும். இளமை நலம், நறுமணம், தெய் வத் தெளிவும் அற முறைமையுடைய நல் வாழ்க்கைக்கு இன்றி யமையாமை யாகவும் முதன்மை யாகவும் வயங்கி, மேன் மேலும் கவர்ச்சியும் உயிர்ப்பும் கொண்டு வாழ்க் கைக்கு அமைதியும் ஊக்கமும் தந்து பெரிதும் பயன்பட்டு வருதலான்; அப்பொருண் மூன்றும் பொருந்திய இயற்கை நிலையிலே உண்மை நிலை வழாது அறிவு நலத்தோடு நிற்ப வர் இறைவ ரென்ற ஒட்பத்தினை ஓரளவுகாட்சி வகை யானும் கருத்து வகையானும், உலக இயற்கைப் பொருள் களில் நுனித் துணர்ந்து கொள்ளப்படும். மணங் கமழ் தெய்வத்து இள நலத்திலே நாறும் தெய்வ மண முரு குடையார் தாம் முருகன் எனப்பட்டார். முருகு என்பது கடவுட் டன்மை என்பதாதல் 'முருகுறழ் தலைச் சென்று' எனும் மதுரைக் காஞ்சியடிக்கு உரை வகுத்த நச்சினார்க் கினியர் 'முருகு—தெய்வத் தன்மை' எனச் சிறப்பாகக் கூறிய வாற்று லறியப்படும். எனவே முருகு எனும் பண் புப் பெயர் அதனை யுடைய கடவுட் காயிற்றென்பது ஈண் டறியற் பாற்று, முருகன்பாற் அருள்பெற விழைந்தார் செல்வதன் முன், அன்னார் பாலே முருகன், தண்பத மின்றியே தான் வந்தெய்திக் காட்சிக் கெளியராய்க் காத் தலைச் செய்தலான் முருகனது இறைமைத் தன்மையின் உண்மை பெறப்பட்டவழி, இயற்கை எழிலின் பிழம்பாம் முருகனே மக்களுயிர்க்குத் தலைவனாகற் பாலன். இத் தலைவன், தன்னை அடுத்த செம் மலுள்ளத் தார்க்கு அறி வொளி பரப்பி அருள் நனி சுரக்கும் பெற்றிய னென்பது 'அஞ்சல் ஓம்பு மதி! அறிவல் நின் வரவு' எனப்படுவதால் வெள்ளிடை விலங்கல். 'உலகத்து ஒரு நீயாகித் தோன்ற விழுமிய பெறல் அரும் பரிசில் நல்கும்' அருளா ளன் முருகனா தலான் முருகனது முற்றறி வுடைமை 'அறி வல்நின் வரவு' என்பதினால் புலப்படுமாறு காண்க.

சங்கத்துப் பாக்களைக் கூர்ந்து நோக்கின், அப் பாக்களின் பெயர் அவ்வப் பாக்களின் சிறந்த சொற்றொடராலும் மற்றும் அடியா லானதையும் வலியுறுத்தும். 'மலை படு கடாம்' என்ற பாட்டின் துறை கூத்தராற்றுப் படையானாலும் அதில் 'மலை படு கடாம் மாதிரத்(து) இயம்ப' (348) என வந்தமை பற்றி அதனை நூல் நுவலப்படும் பொருட் கேற்ப 'மலை படு கடாம்' என்பர். நூலின் கண்ணுள்ள சொற்றொடரின் பொருள் சாயலுக் கேற்ப துறையும் பெயரும் அமையு மாதலான், திரு முருகாற்றுப் படையினது இரு நூற்று, நாற்பத்து நான்காம் அடியில் 'முருகாற்றுப் படுத்த' என விளக்க எழுந்த தொடரே அப் பாவிற்குப் பெயராயிற்று. அச் சொற்றொடர் கொண்டு முருகாற்றுப் படை யென்பது முருகனைப் படிமத்தானது வெறியாட்டுக் களத்திற்கு ஆற்றுப் படுத்திய தாகப் பொருள் கொள்ளலுமுண்டு. இவ்வாறு பொருள் கோடல் பொருத்த முடைத்தாதலை அகப் பாட்டின் (22) 'செந்தினை குருதியொடு தூஉய் முருகாற்றுப் படுத்த, வுரு கெழு நடு நாள்' எனும் அடிகள் அறிவுறுத்தும். மற்றும் முருகனைப் புலனை வென்றோனிடத்தில் வழிப் படுத்தல் என்பது

அனியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெரும! நின்வண் புகழ் நயந்து

(284—285) என்ற கருத்துப் பொருளைக் கொண்டு தெளிவாம்.

நக்கீரனுருரைத்த நன் முருகாற்றுப்படை ஏனைய ஆற்றுப் படைகள் போல இரண்டாம் வேற்றுமைத் தொகையாகாது ஏழாம் வேற்றுமைத் தொகையாகப் பொருள் வழங்கப்பெறுவது அறியப்படும். பரிசில் பெறற் குரிய பொருநர், பாணர் முதலியோரது பெயரை முன்னதாகக் கொள்ளும் பிற ஆற்றுப் படைகள் போலல்லாது இத் திரு முருகாற்றுப்படை, பரிசில் அளித்தற்குரியாரது பெயரை முன்னதாகக் கொண்டு முருகக்கடவுளாகிய முழுமுதற் றலைவரிடத்தில் ஆற்றுப் படுத்தல் என ஏழாம் வேற்றுமையாக, பண்டே வழங்கும் பான்மையுடையது. இவ்வாறு வழங்கும் வழக்குண்மையினை ஆயின், இரண்டாம் வேற்றுமைத் தொகையாகக் கூறப்பட்ட ஆற்றுப்

படைகள் யாவும் புகமொளி விளக்கமும் பேராற்றலும் ஈதலோடு புரத்தலு முடைய மக்களிடத்து ஆற்றுப் படுத்துவதாகுமென்றும், ஏழாம் வேற்றுமைத் தொகை யாகக் கூறப்படும் ஆற்றுப்படை, என்றுமுள்ள முழுமுதற் றலைவரிடத்து மக்களை ஆற்றுப்படுத்துவதாகுமென்ற மெய்ம்மை தெளியற் பாலது. இத்தகைய தெளிந்த வுண்மைக் கொள்கைக்கு அரணாக, ஆக்கியோன் கருத் தறிந்து உரைமலர்த்தும் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்துப் பாடாண் பகுதிஉரையில் முரு காற்றுப் படையை நினைவு கூர்ந்து 'இதனைப் புலவ ராற்றுப் படையென்று உய்த்துணர்ந்து பெயர்கூறு வார்க்கு 'முருகாற்றுப்படை' யென்னும் பெயரன்றி அப்பெயர் வழங்காமையான் மறுக்க' எனக்கூறியது சற்றும் மறக்கொணாத தென்க. மற்றும் மெச்சும் புலமை வாய்ந்த நச்சினார்க்கினியர், முழுமுதற் கடவுளாகிய முருகன் பால் பெறும் பரிசில், வீடு பேறுதலின் 'முரு காற்றுப்படை என்பதற்கு வீடு பெறுதற்குச் சமைந் தானோர் இரவலனை வீடுபெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்ததென்று பொருள் கூறுக' என நன்கு வலி யுறுத்தி மொழிந்தது கூர்ந்து உணரற் பாற்று. மற்றும் புறநானூற்றில் புலவராற்றுப்படை எனும் துறையினை விளக்க எழுந்த கோதைமார்பிற் கோதையானும்' என்ற புறப்பாட்டினுரையில் (புறம்—48) 'தலைவனதியல்பையும் ஊரையுங் கூறி. முதுவாயிரவல, எம்முமுள்ளெனத் தன் தலைமை தோன்றக் கூறினமையால் இது புலவராற்றுப் படையாயிற்று' எனக் கூறப்பட்டுள்ளதினான், மக்க ளிடத்து மக்களை ஆற்றுப்படுத்துவதற்குப் புலவராற்றுப் படை என முன்னர் வழங்கப்பெறும் உண்மை அறியப் படும். இவ்வாற்றால் திருமுருகாற்றுப்படை, இரண்டாம் வேற்றுமைத் தொகையாகப் புலவராற்றுப்படை என வழங்கப்பெறாமை நச்சினார்க்கினியர் கருத்தாகுமென்க.

தெய்வ மணமுருகு கமழும் திருமுருகாற்றுப்படை இயற்கைப்பாவாகிய அகவற்பாவால் நிலையுற்று விளங்கி இயற்கையின் உயிராகிய இறைவனை அடையும்நெறியினைப் புலனாகச் செய்வதினான், இவ்வாற்றுப்படை, பொருளு ணர்ந்து விரும்பிச் சொல்லுவாரை, மீட்டும் தன்னை நோக்கி நோக்கப் பயன்கொள்ள நிற்கும் நிலைமை வாய்ந்துள்ள

தென்பது இனிது புலனாகும். திருமுருகாற்றுப்படையின் நூற்பயனும் நாற்பொருளே யென்பது, அவ் வாற்றுப் படையில் நன்குற வமைந்து கிடக்கும் நாற்பயன் வலி யுறுத்தும்.

'ஒரு முகம், குறவர் மடமகள் கொடிபோல் நுசுப் பின்—மடவரல் வள்ளியொடு நகை அமர்ந் தன்றே'

என்பதினாலும்,

சீரை தை இய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால் நரை முடியினர்
மாசு அற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தை இய ஊன் கெடு மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பல உடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத் தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற் றோர்க்குத்
தாம் வரம்பு ஆகிய தலை மையர் காமமொடு
கடும் சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனி இல் காட்சி முனிவர்'

என்பதினாலும் முறையே இல்லற வொழுக்க நிலையையும் துறவற விழுப்பத்து நிலையையும் கூறப்பட்டது அறியப் படும். இதனான் உலகில் நகை யமர்ந் துறையும் வாழ்க் கையின் நோக்கம் இன்ப மென்றும், வாழ்க்கையினை இயற்றுவ தெல்லாம் விழுமியது எய்துதற் கென்பதூம் தெளிய உணர்ந்து கொள்ளப்படும். வாழ்வியல் முறையில் படிந்துள்ள, நிலையிலின்பம் அற வழியில் நெறிப்பட்ட ஞான்று நிலையுளின்பமாய் மாறுதல் இயற்கைமுறை யாத லானும், அறமாவது நல்வினை யென்றும், அறத்தின் பயன் பேரின்ப மென்றும், அறத்தின் நிலையினை இரு பகுதிப்பட கூறப்பட்ட வாறு காண்க. புள்ளணி நீள் கொடிச் செல் வனும், யானை எருத்தமேறிய திருக்கிளர் செல்வனும் மூவெயின் முருக்கிய முரண் மிகு செல்வ னும், குறை யிரத்தல் வேண்டித் தன்னை வந்துக்காண, அறமறி யீகை அறுமுகன், அறநெறிச் செங்கோன்மை பூண்டு,

ஆவினன் குடியில், அருளும் அறிவும் சான்ற கந்தருவர் குழாம் யாழிசைத்துப் புடைசூழ, மன்னறம் புரிய அசை தலு முரியன் என அரசியல் கூறியதால் பொருளும் தெற்றெனத் தெளியப் படுகின்றது. 'மயில் கண்டன்ன மட நடை மகளிரோடு மென்றோட் பல் பிணை தழீ இத் தலை தந்து, குன்று தோறாடலும் நின்ற தன் பண்பே' என்று கூறிய தினுன், உள்ளார்ந்த உயிர்க் காதலின் பயனுகிய இன்பமும், வேண்டுநர் வேண்டியாங் களித்து மெய் யின்பம் பயக்கும் 'எய்யா நல்லிசைச் செவ்வேற் சே எய் சேவடி' என்று கந்தழி கூறியதினுல் வீடும் பெறலாயிற்று. மற்றும் ஆறிருந்தடந் தோளண்ணல் ஆறெழுத்தினையும் உணர்ந்து கூறுமவர் சிந்தை தனில் குடிகொள்ள, அன்னவர், பிறவி நோய் வெந்து வீழ பேரின்ப' வீட்டில் குடி புகுவ ரென்ற உண்மை,

ஆறெழுத் தடங்கிய அருமறைக் கேள்வி
நா இயல் மருங்கில் நவிலப்பாடி
விரைஉறு நறுமலர் ஏந்திப் பெரிதுஉவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்.

என்ற திரு வே ரகப் பகுதியின் கண் கவுடமாகப் பெறப் படுவதினுன், வீடு தவி பெருமை யெய்தும் சேவடியின் சிறப்பு புலனும். இப் பாட்டின் கண் அகத்தில் இன்பத் தையும் புறத்தில் அறமோடு கூடிய பொருளையும், அவ் வறத்தின் பயனுய வீட்டையும், ஆசிரியர் நக்கீரர் அமைத்துப் புறப் பொருள் விரிவில் அகப்பொருட் டெளி வினைக் கிளக்கும் மாட்சி அவர் தம் புலமைக் கலை நலத்தின் மேன்மையினை நன் கினிது காட்டா நிற்கும். இவ்வாறு திரு முருகாற்றுப்படை நாற் பொருள் பயந்து தனிச் சுடர் விரித்துத் தெய்வ மணங் கமழ்தலான், அதனை சிறப்புக் கருதி பதினேராந் திரு முறையில் சேர்க்கப் பட்டுள்ளது இயற்கைத் தென்பது கொளத் தக்கது.

முருகன் தன்னைச் சார்ந்தார்க்கு அருள் சுரக்கும் பான்மையினை, ஒல்லும் வகையான் ஞானப் புலமையின் மெய்ந் நிலையில் நின்று புலப் படுத்தும் நக்கீரர், காணப் படும் பொருளி னூடிருக்கும் மறை பொருள் இறை யெனக் கருதி, உல கிடைத் தோன்றும் புறப் பொருட் சிறப்பினை அகத் தெளிவின் பொருட்டு விரித்துக் கூறியது

மன வியற்கைக்கு முற்று மியைந்தது. புற இயற்கை அறிவோடு அகத் தினிமை இழையுங்காலை, எங்கெங்கே இளமைச் செவ்வி நலமும், அழியா இயல்பும், மாசின்மையும், பேராற்றலின் உண்மைத் தன்மையும் தோன்றுமோ அங்கங்கே மன னுணர்வு எழப் பெறுதல் ஒருதலை. இத்தகைய உணர்வு அகத்தில் இன்பத்தையும் புறத்தில் அறத்தையும் அதன் பயனையும் தருதலான் புறத்தறிவின் பயிற்சி பெரும் பான்மையாற் வேண்டப்படும். இத் தகையவற்று மக்கள் பயின்று அதன் வழி ஆழ்ந்து தெளிந்து வாழ்க்கையை மாண்புடைய தாக்க, உலகமே சிறந்த கருவியாகும். உலகத்தின் கண் மக்கட் குரிய சிறந்த உண்மைப் பொருளை யாதென உணர்த்த, முதற் கண், நக்கீரர் உலகம் ஞாயிறன்றி இயங்கா தெனவும், ஞாயிற்றின் ஒளியே உயிர்த் தொகைகள் மகிழும் உயிர் நிலை யென்றும் கருத்து கொண்டு, காணப்படும் இள ஞாயிற்றினைக் காட்டி, எளிதே காணப்படாத சிவ வீற்றில் எழுந்த முருகனது வாழ்வொளி யுருவினை விழுப்பம் தோன்ற

உலக முவப்ப வல னேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டா அங்
கோவற் விமைக் குஞ்சேண் விளங் கவிரொளி

என விளங்க வைத்தார். இதனுன் அறியாமை யெனும் பேரிருண் மடிய முருகனும் பருதியும் முரணெ டெழுந்த வகை புலனும். இதன் கண் நிறனும் தொழிலும் பற்றிய உவமை நினை தொறுஞ் சுவை பயக்கும் சிறப்பு வாய்ந்துள்ளது. இள ஞாயிறு எவ்வண்ணம் உதித்த ஞான்றே உலகிருள் கெடுகின்றதோ அவ் வணம் முருகனும் இளம் பருதியு மெழ அறியாமையாம் பேரிருள் நெஞ்சினின்றும் அகன் றேடு மென்றும், இள ஞாயிற்றின் செம்மையும் கடலின் பசுமையும் கண் கவர் காட்சியிற் படு மாறு போன்று, முருகனது திருமேனியின் அருளுருச் செம்மையும், விந்து தத்துவம் விளக்கும் மயிலின் பசுமையும் காண் பாரது அகத் தறிவைக் கவர்ந்தும் மனதை ஈர்த்தும் இன்பம் வழங்க வல்லதாகத் தோன்று மென்று உவமித்த சிறப்பு அறிவுடையார் நுனித்து நோக்கி மகிழத் தக்கது.

தேற்றி வருகிறூர்களாம்; சென்ற இரு பெரும் யுத்தங்களில், மக்கள் மனம் நிம்மதியுற இடையிடையே இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்ததாம். சரல் என்பவர் மயக்கம், பைசாசம் நீங்க வும், சாந்தம் உற்சாகம் அடையவும் பண்ணைக் கையாண்டனராம். ஆதலால் பிரகிருதியின் வேகமே இசை மயம் எனலாம்.

இசை என்னுஞ் சொல் தமிழாகும், வடமொழியில் ராகம் என்பர். மேனுட்டில் அல்லிக்ரேடா, அலிக்ரி, மாஸ்டிரோ, மிலிட்டலி எனவும் கூறுவர். தமிழர் பண், பண்ணியம், திறம், திறத்திறன் என நான்கு வகைப்படுத்தினர். பண்நான்கு வகையாகும். பாலைப்பண், குறிஞ்சிப்பண், மருதப்பண், செவ்வழிப் பண் என்பனவாகும். திறன் அந்தாளி, மருள், குச்சரி, குறண்டி, சாதாரி எனவும் விரிக்கலாம். முன்னம் இருந்தோர் பண்ணில் ஒவ்வொன்றையும் அடக்கினர். மேலும் பெருந்தானம் எட்டு கிரியைகள், எட்டுப் பண்ணிப் பாடுதலால் பண்என்பதாயது. பண்சாதிப் பெயர். பண்கள் பாலையாழ் முதல் நூற்று மூன்றுண்டு. பாடல் தொழில்களாவன, யாழின்கண் வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல். தெருட்டல், எண்ணல், பட்டடை என்பனவும்—பண்ணல். ஆராய்தல், தைவரல், செலவு விளையாட்டு, கையூழ், குறும்போக்கு முதலியனவும். மிடற்றின் கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலமென்பனவும் பெருவண்ணம். இடைவண்ணம், வனப்பு வண்ணம் முதலிய வண்ணங்கள் சேர்ந்து எழுபத்தாறுகும் என்பர். இப்பண்பாட உற்றூர் ஆன்மா மிகுதியாக உயரும், ஆவலோடுழைக்க ஏதுவாகும், நாநலத்தால் உண்டி ஏற்கும், செம்மையான தூக்கம் வரும், மனம் உற்சாகமாக இருக்கும். இன்னும் பல நலனுண்டு.

இசையால் மனப்பயிற்சி, குணப்பயிற்சி, மூளைப் பெருக்கம், இருதய வன்மை, உடல் வளர்ச்சி, குற்றம் போதல், சகிப்பு, வாழ்க்கைக்கு வழி, மதிப்பு, விடாவூக்கம், நல்ல தோற்றம். மாசற்றநிலை, சுயேச்சை, மந்த நிலையின்மை, கவனிப்பு, மகிழ்வு மிகை, தன்னம்பிக்கை, இன்னபிறவும் அமையும். அன்றியும் இசையால் சூல் உண்டு என்பதும், இரத்த ஒழுக்குப்போக்கு, பைசாசம், பயித்தியம் நீங்கல் என்பனவும் உண்டு. இவை பேராசிரியர் டாலின் கருத்தாகும். பாடகர் டாமன் என்பார் இசையால் குடியர்களைத் திருத்தினூர். ஏரியன் என்பவர் பைத்தியக்காரரைத் திருத்தினூர். இப்படி அநேகர் இசையால் பலநன்மையுற்றுள்ளனர்.

இறைவன் இசைக்கு இரு காதும் கொடுப்பார் என்பதை தேவர், நாரதர், முருகர், மாதங்கி, பதஞ்சலி, ஆயனூர், நீலகண்ட யாழ்ப்பாணர் முதலியோர் அறிந்திருந்தனர். அதனுல் தான்

குழலின் மகிமையும், யாழின் சிறப்பும், தேவாரத்தின் பண்ணும் தெளிய வரலாயின.

நம் பெரியோர் இசையை ஒரு தமிழாக்கி, அதற்கு இலக்கணமும் வகுத்துள்ளனர். அவை சுருதியிலக்கணம் சுரவிலக்கணம், ராகவிலக்கணம், தாள இலக்கணம்; பாவனை யிலக்கணம், அலங்கார இலக்கணம், நவரச இலக்கணம் என்பனவாம்.

ஒருவன் தெளிந்த இசைஞானம் கொண்டிருப்பானுயின், அவனையே உலகம் அழகுடையவனுகப் போற்றும். அவ்வழகுக்குப் பாட்டும் இசையுமே காரணமாகும். அழகு என்பது இளமை, கொழுமை, வண்மை எனப் பலபொருள் தரும் சொல்லாகும். எனவே அழகு எப்படிக் கண்ணைக் கவருமோ அப்படியே இசை இதயத்தை உருக்கி இழுக்கும் வன்மை கொள்ளும். அதனுல் அது பாட்டினிடம் பரவிநிற்கக் காண்கின்ருேம்.

பாட்டும் இசையும் ஒற்றுமைப்பட்டே இருக்கவேண்டும், சிலர் பாடும்போது ஓசைக்கு மதிப்பளித்துப் பாழ்பண்ணுகின்றனர். பாட்டின் பொருள் விளங்க ஓசையும் அமைந்து வரவேண்டும். பாட்டைக் கெடுத்து இசையை மட்டும் மிக வைத்தால், கேட்போர் மனம் வேறுபடும். பாட்டு இயற்கையின் வடிவில் அமைவது; அதனையே அழகு என்பர். அதனைக் கெடுத்துப் பாடின அஃதே அவ்வழக்கைக் கெடுப்பதாகும். இசை செயற்கையில் வருவது. ஆதலால் இசை செயற்கை வடிவமாகும். இயற்கையான பாட்டுடன் செயற்கை இசை இடமடைந்தமையால் ஒரு தனி வன்மை அடைகின்றது. இவ்விசையுடன் செயற்கைக் கருவிகள் இருத்தல் பல நலன் விளைப்பனவாகும். இதை யறிந்தே, 4000 ஆண்டுக்குமுன் இருந்த இசையறிஞர் குழல், யாழ், தோற்கருவி, துளைக்கருவி, நரமபுக் கருவி. கஞ்சக்கருவி, மிடற்றுக் கருவி, இவைகளைக் கொணடிருந்தனர். முழவு, தாளம், தொண்டை இன்னோரன்னவும் பயன்படுத்தினர்; இணைந்து இசைத்து இசையைப் பெருக்கினர். அப்படி வளம்படுத்திய இன்னிசையை நாம் கைவிடல் நலமாமோ? எனவே, அன்பர்கள் பண்டைய இசையைக் கருவியுடன் கலந்து பாடி மகிழ்வதோடு, உலகத்தாரையும் மகிழ்விப்பார்களாக.